**17.1)"இரண்டு முறை த்வயத்தின் பொருள் கேட்ட கொங்குப்பிராட்டி**

அக்காலத்தில் , மேற்கே கொங்கு நாட்டிலே மழையின்றி வறட்சி மிகுந்திருந்தது. ஆகையால் கொங்குப்பிராட்டி பர்த்தாவும் தானுமாய்க் கோயிலுக்கு வந்து திரிவிக்ரமன் திருவீதியிலே ஒரு திருமாளிகையின் மச்சிலே குடியிருந்தாள்.

அப்போது எம்பெருமானார் ஏழு அகங்களிலே மாதுகரம் பண்ணி அமுது செய்தருள்வார். ஒரு நாள் அவ்வகத்திலே மாதுகரத்துக்குக்கென்று எழுந்தருள, கொங்குபிராட்டியும் எம்பெருமானார் எழுந்தருளியதைக் கண்டு மச்சிலிருந்து கீழிறங்கி இடைகழியிலே நின்று நகைத்தாள். ஏம்பெருமானாரும் சிரித்து, "இது ஏன் பெண்ணே" என்று கேட்டருளினார்.

17.2 கொங்குப்பிராட்டியும், "உம்மை ராஜாக்களும் பட்டணத்து முதிலிகளும் தண்டனிகிடுன்றனர்

17.3 ஏ மாதுகரம் (பிக்ஷை) பண்ணுகின்றீர், இதற்குப் பொருள் என்ன, என்று வினவினாள். உடையவரும், "அவர்களுக்கு பகவத் விஷயத்தில் சில நல்வார்த்தைகள் சொல்லிவருகிறேன், அதனால் அவர்கள் தண்டனிடுகின்றனர். காண்" என்று பதிலளித்தார். அவளும், " அந்த நல்வார்த்தையை அடியேனுக்கும் அருளிச்ய்ெய வேணும், என்று திருவடிகளிலே ஸேவித்து ப்ரார்த்தித்தாள். அப்போது உடையவர் ஆந்கே அவ்விடத்தே த்வயத்தை அவளுக்கு உபதேசித்தார்.

17.4 பின்பு சிலநாள் கழிந்ததும் தங்களுடைய தேசத்தில் மழை பொழிந்து வளம் கொழித்ததும் கொங்குப் பிராட்டியும் கணவரும் தங்கள் தேசத்தைக் குறித்துப் புறப்பட்டனர். அப்போதுமுன்பு உடையவர் அருளிச்செய்த நல்வார்த்தை மறந்துபோனபடியால், மீண்டும் எம்பெருமானாரை ஸேவிக்கப் பெற்றிலேன் என்று வருந்தியிருந்த போது மீளவும் எம்பெருமானார் அந்கே எழுந்தருளினார். கொங்குப்பிராட்டியும் அவருடைய திருவடிகளிலே ஸேவித்து,முன்பு தேவரீர் அரளிச்செய்த நல்வார்த்தையை மறந்து போனேன். மீண்டும் அதை என் நெ-சில் படும்படி அருளிச்செய்து எழுந்தருளவேணும்"என்று விண்ணப்பம் செய்தாள்.

17.4 உடையவரும் அவளுக்கு நெஞ்சில் படும்படி மீண்டும் த்வயத்தை அருளிச்செய்து புறப்பட்டருளும் போது கொங்குப்பிராட்டி, " பின்னையும் அடியேனுக்கு ஆத்மா உய்வு பெறுவதற்கு ஏதேனுமொன்று தந்தருளவேணும்" என்று விண்ணப்பம் செய்ய, எம்பெரு மானார் அப்போது தாம் சாத்தியிருந்த ஸ்ரீபாதரக்ஷையை (பாதுகை-திருவடிநிலை) தந்தருளினார், அவர்களும் நன்றியுடன் விடைபெற்று கொங்கு தேசத்தைக் குறித்துச் சென்றனர்.

**18) திருவரங்கம் பெரியகோயிலின் நிர்வாஹமுறையும் இராமானுசரின் மேலாண்மையும்.**

இராமானுசர் பெரியதிருமண்டபம் எனப்படும் அழகிய மணவாளன் திருமண்டபத்தில்(சந்தன மண்டபத்தில்) எழுந்தருளியிருந்து தாம் கோயில் கைங்கர்யத்திற்காக ஏற்படுத்தி வைத்த பெரியகோயிலில் கைங்கர்யம் பண்ணி போருகிற கோவணர், பட்டர்கள், தோதவத்தித்துாயமறையோருள்ளிட்டார், நாலா தேசத்திலிருந்தும் எழுந்தருளியுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள், விண்ணப்பம் செய்வார், திருவாசல் காக்கும் ஆரியர்கள், பெருமாளுக்கு திருவடிபந்தம் பிடித்துத் திருத்தோப்பு

செய்யும் ஸ்ரீ புண்டரீகர் உள்ளிட்ட பத்து கொத்தில் உள்ளாரும், அவரவர்களுக்கு இடப்பட்ட காரியங்களை செய்து வாரும் என்று நியமித்தருள்வார்.

**19) கோயில் கணக்கருக்கு இட்ட ஆணை**

பின்பு ஸ்ரீ கார்யத்திற்குப் பரிவரான திருவேளைக்காரர், திருப்படைவீட்டுக்கு காவலாய் இருக்கும்படியான படிகாப்பான், திருவீதிதோறும், ஆராய்ந்து போரும் தலையாரிகள், திருவீதி செப்பனிடுவார், திருமஞ்சன வழிதிருத்துவார், திருக்காவிரி கரைகாப்பார் (இருகரைகாப்பார்),சுற்றுக்கோயில் செப்பனிடுவார், பெரியகோயிலுக்கு ஊழியம் செய்து போருவார், பொன், வெள்ளி நகைகள், பாத்திரங்கள் மற்றும் செப்புப் பாத்திரங்கள் செய்திடும் தொழிலாளர்கள், ரதம், கோபுரம், ப்ரதிமைகள், (சிற்பங்கள்) செய்திடுவார் மண்பாண்டம் செய்திடுவார், சித்திரம் எழுதிடுவார், நாட்டியம் பழக்குகின்ற நாட்டியத்தினை பயிற்றுவிக்கும் ஆசான், நாட்டியம் பழகிக் கொள்ளும் நாரிகள்(பெண்கள்) கோயிலுக்கு பலசரக்குகள் கொண்டுவரும் செட்டி வியாபாரிகள், கோயிலுக்குப் பாலமுது, நெய்யமுது தொய்வின்றி தந்திடுவதற்கு உதவிடும்வகையில் உள்ள பசுக்களை ஆராய்ந்து போரும் கோபாலர்கள் முதலானோரை அந்தந்தக் கைங்கர்யங்களிலே ஏவி அவர்களுக்குச் சேரவண்டிய பொற்காசுகளை உரிய நேரத்தில் தந்திடுமாறு கோயில் கணக்கருக்கு நியமனம் செய்வார்.

**20) இராமானுசரின் மருத்துவ இயல் பற்றிய அறிவு**

இராமானுசர் தினந்தோறும் கொட்டாரத்திற்குச் சென்று அங்குள்ள பசுக்களைத் தம்முடைய திருக்கையால் தடவிக் கொடுத்துத் தீவனம் இடுவார். அவ்வாறு அவர் பசுக்களை தடவிக்கொடுக்கும் போது அவற்றிற்கு ஏதேனும் வியாதி உண்டா என்பதை நொடிப்பொழுதில் அறிந்து கொள்வாராம். அவ்வாறு வியாதியால் பீடிக்கப்பட்ட மாடுகள் இருப்பின் தம்முடன் வருகின்ற கோபாலரை உடனடியாக அந்த மாட்டிற்கு மருத்துவ உதவி அளித்துக் கவனித்திடச் செய்வார். அங்குள்ள பசுக்களின் எண்ணிக்கை குறையாமலிருப்பதற்காக கிழக்குச்சித்திரை வீதியின் வடக்குப் பகுதியில் அமைந்திருந்த கோசாலையிலிருந்து பசுக்களை உடனடியாகக் கொட்டாரத்தில் சேர்த்திடஆவன செய்திடுவார். இந்த நிகழ்ச்சியின் மூலம் இராமானுசருடைய பரந்த வைத்திய சாஸ்திர அறிவும், வருமுன் காக்கும் செயலும் வெளிப்படுகிறது. வடகிழக்கு மூலையில் (கோரத மூலை) கோசாலை அமைந்திருந்ததனால் இன்றைக்கும் பங்குனிப் பெருவிழாவின்போது புறப்படுகிற ரதத்திற்கு கோ ரதம் என்று பெயர். ( **கோசாலையிருந்த இடத்திலிருந்து புறப்பட்டதனால் இந்த ரதத்திற்கு கோரதம் என்று பெயர் ஏற்பட்டது**)

**21) இராமானுசரின் மேலாண்மைக்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு**

சோழநாட்டின் வடகரை, தென்கரை கீழை மாகாணம்,மேலை மாகாணம் ஆகியஇடங்களிலிருந்து அரசர்களால் நிவந்தமாக அளிக்கப்பட்ட கோயில் நிலங்களிலிந்து பெறப்படுகின்ற பொன்னையும், நெல்லையும் அவர்கள் கொண்டு வந்த கணக்கின்படி ஆராய்ந்து கணக்கரைக் கொண்டு பரிசோதித்து அவற்றிற்கான வரவு கணக்கினை ஓலைப்பத்திரங்களை எழுதித் தம்முடைய கையெழுத்திட்டு ஒரு ஓலைப் பிரதியினை அவர்களிடம் கொடுத்து மற்றொரு ஓலை பிரதியினை ஸ்ரீபண்டாரத்துக்கோப்பிலே வைத்திடுவார்.

**22) ஆத்மஸூத்தியோடு கைங்கர்யம் செய்திடுங்கோள் என்று பணித்த இராமானுசர்**

ஒவ்வொரு நாளும் கைங்கர்யத்திற்குத் தேவையான மண்பாண்டங்களையும், எம்பெருமானது திருவாராதனத்திற்குத் தேவையான பொன்

வெள்ளிப்பாத்திரங்கள், குத்துவிளக்கு, திருமுன் வட்டில்கள் ஆகியவற்றை பார்வையிட்ட பிறகு வாகன மண்டபத்திற்குச் சென்று விதவிதமாக ஆடைதைப்போரிடம் எம்பெருமான் திருமேனிக்கும் வாகனங்களுக்கும் உரியவண்ண ஆடைகளை புதிது புதிதான வகைகளில் தைத்திடுமாறு பணித்திடுவாறு. பின்பு வாகனங்கள் செப்பனிடுவாரோடு அளவளாவிய பிறகு, ஆடுவார், பாடுவார், வாத்தியங்களை இசைத்திவார், திருசங்கு ஊதுவார் ஆகியோர் செய்திடும் கைங்கர்யத்தினால் எழுகின்ற ஒலியைத் திருச்செவி சாற்றிக்கொண்டே திருமடைப்பள்ளிக்கு எழுந்தருள்வார். அங்கே திருப்பணியாரங்கள் நன்றாக சமைக்கும்படியை, திருப்போனகம் சமைக்கும் பணியையும், கறியமுது சமைக்கும் பணியையும் கடாக்ஷித்து, அவற்றை ஆத்மஸுத்தியோடே எம்பெருமானுக்கு படைத்திடுங்கோள் என்று நியமித்தருளுவார்.

## 23) கரும்பஞ்சாறு கலந்த தீவனத்தை உண்டால் சுரக்கும் பால் சுவையோடு கூடியதாய் இருக்கும்.

திருக்கொட்டாரத்தில் உள்ள பசுக்களுக்கு நன்றாக பாலமுது சுரக்கும்படியாகவும், அந்த மாடுகளுக்கு இனிக்கும் படியாகவும் கருப்பஞ்சாற்றோடு கலந்த தீவனங்கள் படைக்கப்படுவதை மேற்பார்வையிட்ட பிறகு பாரம் இழுப்பதற்காக உள்ள எருதுகளையும் பார்வையிட்ட பிறகு பெரிய திரு மண்டபத்திற்கு மீண்டும் எழுந்தருளுவார்.

## 24) சயனபேரரை ஸ்ரீரங்கநாச்சியாரோடு பள்ளியறைக்கு கொண்டு சேர்க்கும் வைபவம்

கோயிலாழ்வாரிலே (கருவறையில்) எழுந்தருளியிருக்கின்ற சயனபேரருக்கு உள்ளூரார் என்ற கைங்கர்யபரர்களைக் கொண்டு மெள்ள வெந்நீர் திருமஞ் சனம் செய்வித்து திருபபரியட்டங்களாலே திருவொற்றாடை ஸமர்ப்பித்து, சந்தனாதிகளை எங்கும் தெளித்து தூமப்புகை சீருற்ற அகில் புகைகளாலே எங்கும் மணம் கமழும்படி செய்து பட்டுத்துணிகளாலே மேல் கட்டு கட்டுவித்து பல விதமான மலர்களை பரப்பிய பிறகு ஸ்ரீரங்கநாச்சியார் கோயில் திருப்பள்ளியறையையும் அலங்கரித்து திருப்பள்ளிக் கட்டில் பரிமாறி குங்கும மெத்தை திருவணை முதலாக அனைத்தையும் ஒழுங்கு செய்து அதிலே ஊஞ்சல் ஸமர்ப்பித்திடுவார். நம்பெருமாள் களைந்த திருமாலைகள் முதலானவற்றை சேனை முதலியாருக்குச் சாற்றுவித்து நம்பெருமாளுக்கு அடைக்காய் திருத்துவித்து சயனபேரரை ஸ்ரீரங்கநாச்சியார் ஸந்நிதிக்கு எழுந்தருளுவித்து குத்துவிளக்கெரிய பொற்குகிடாரம், வெள்ளிக் கிடாரங்களிலே பால்குழம்பு சேர்த்து அமுது செய்வித்த உடனே திருவெண்சாமரம், திருப்படிக்கம், கலசப்பானை, திருவடிநிலை, உடைவாள், இலைத்தட்டு, காளாஞ் சி, திருவாலவட்டம், சுழற்றி, அடுக்கொலியல் முதலான அத்தாணிச் சேவகமும் செய்வாராய் ஸேவிக்க அத்தோடே அரம்பையர்கள் தற்சூழ்ந்து தாலாட்டு ஸேவிக்க, யாழ் குழல் வீணைவாசிக்க, பின்பு தேனாகிப்பாலாந்திருமாலான செங்கமலத் திருமகளும் புவியும் செம்பொற்றிரு வடியிணையினை வருட முனிவர் ஏத்த பள்ளிகொள்ளுமிடத்தடி கொட்டிட திருவரங்கத் தரவணையிலே பள்ளி கொண்டருள, (உறகலுறகல்) இத்யாதிப்படியே பள்ளியறை குறிக்கொண்டு நோக்கும்படி சங்கசக்ராதி திவ்யாயுதங்களையும், திக்பாலகர்களையும், ஸர்வலோக பாலகரான பெருமாளுக்குக் காவல் அடைத்து நிர்ப்பரராய்க்கொண்டு தண்டன் ஸமர்ப்பித்து க்ஷமைகொண்டு ஸ்ரீநிதிகிடக்கிற விடத்துக்குத் திருக்காப்பு சேர்த்திடுவார். (தாயார் ஸந்நிதியில் உள்ள மஹாமண்டபத்தின் வடக்குப் பகுதியில் இந்த ஊ ஞ்சல் கொக்கிகளை இன்றும் காணலாம்.)

**26)நாளைக்கு நல்ல பொருள்களை கொண்டு வாருங்கள் என்று நியமித்த இராமானுசர்.**

பின்பு, கோபாலர்களை விளித்து "நீங்கள் அந்தந்த வேளையிலே பால், தயிர், வெண்ணெய் கொண்டு வந்து சேர்ப்பித்திடுங்கள்" என்று கட்டளையிட்டு, அமுதுபடி கரியமுது முதலானவைகளை காலா காலங்களிலே கொண்டு வந்து நிறைத்திடும்படி அவ்வவத் தொழிற்காரர்களுக்கு அருளிச்செய்து பொன்னும், நெல்லும் கொண்டு வந்து சேர்த்தராஜமனுஷ்யர் தேசாந்திரிகளுக்கு விடை கொடுத்தருளி பத்துக்கொத்தில் உண்டான வர்களும் மற்றும் உண்டானவர்கள் தம்மோடு தொடர்ந்துவர தம்முடைய மடத்திற்கு எழுந்தருளுவார்.

**27)அ) அரவணையைச் சுமந்து சென்ற அழகிய மணவாளன்**

பெரிய பெருமாளுடைய கைங்கர்யங்களை உடையவர் செய்து கொண்டுவருகிற காலத்தில் ஒரு கல்தச்சன் கோபுரலை கட்டிவரும் காலத்தில் ஒரு கல்லைப் பிளக்க அதன் நடுவில் ஒரு தேரையும், தண்ணீரும் இருக்கக்கண்டு கல்லின் நடுவிலே இருந்த தேரைக்கு வாழ்வை அளித்திடும் எம்பெருமான் நமக்கும் வாழ்வு அளித்திடுவார் என்ற எண்ணத்துடன் தன்னுடைய குடும்பப்பொறுப்பு அனைத்தையும் எம்பெருமான் திருவடிகளிலே ஸமர்ப்பித்துப் பரந்யாஸம் பண்ணி, வட திருக்காவிரியில் ஒரு மரத்தின் அடியில் அமர்ந்து எந்தத் தொழிலையும் செய்யாதிருந்தான்.

27 ஆ) அவ்வாறு அந்தக் கல்தச்சன் பரந்யாஸம் பண்ணிக்கொண்டு தன் குடும்பத்தைக் காத்திடும் பொறுப்பு எம்பெருமானுடையது என்ற உறுதிப்பாடுடன் இருந்துவந்த காலத்தில், ஒவ்வொரு நாளும் அழகியமணவாளன் இரவு தமக்கு கண்டருளப் பண்ணப்பட்ட திருவொத்தசாதத்தைத்(அரவணையை) தாமே தம் தலையில் சுமந்துசென்று, அந்தக்கல்தச்சனுக்கும் அவன் குடும்பத்தினருக்கும் உணவாக அளித்துவந்தான். சில காலம் சென்ற பிறகு அந்தக் கல்தச்சன் இறந்துவிட்டான். அந்த செய்திகேட்ட உடையவர், கல்தச்சனுடைய குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறும் பொருட்டு சென்ற இடத்தில் அவனுடைய மனைவி "இன்றுவரை எமக்கு நீர் உணவளித்து வந்தீர், என்னுடையய கணவன் இப்போது இறந்துவிட்டான். நான் கதியற்று இருக்கிறேன். கோயிலிருந்து நீர் அனுப்பிவைத்த சோற்றினை உடனே நிறத்திவிடாதீர்கள்" என்று கூறினாள். அதுகேட்ட இராமானுசர் "இன்றைக்கானாலும் அழகியமணவாளப்பெருமாள வெறுந்தலையுமாய் சோறுசுமவாமல் ஸுகமாயிருப்பர்" என்று அருளிச்செய்தார். இதன் பொருளாவது " இன்று தொடங்கி அழகியமணவாளன் தம் தலையிலே சோற்றைச் சுமந்துகொண்டு செல்லவேண்டிய நிர்ப்பந்தம் இல்லை" என்பது ( அன்று முதல் ஸ்ரீபண்டாரத்திலிருந்து கல்தச்சன் குடும்பத்திற்குத் தேவையான ப்ரஸாதத்தை அனுப்பி வைத்தார் இராமானுசர்.)

**28 அ)இராமானுசரின " பகவத் விஷய காலக்ஷேப" கோஷ்டி**

உடையவர் கூரத்தாழ்வான் முதலியாண்டான முதலான முதலிகளுடனே அருளாளப்பெருமாள் எம்பெருமானாரையும் தம்முடைய திருவருளால் கூட்டடிக்கொண்டு ஸர்வாதிகாரமான (வர்ணாச்ரம பேதமின்ற அனைவராலும் ஓதிப்பொருள் உணரத்தக்க) திருவாய்மொழிக்கு அர்த்தமருளிச்செய்து கொண்டு திவ்ய கோஷ்டியாய் வீற்றிருந்தார். ஆசார்யர்கள் எல்லாரும் வந்து உடையவரை அடிபணிந்து உய்ந்தனர்.

**28 ஆ) "குருவியின் கழுத்திலே பனங்காய்"**

இந்த வைபவங்களைக் கேள்விப்பட்ட அனந்தாழ்வானும், எச்சானும், தொண்டனூர் நம்பியும், மருதூர் நம்பியும் உடையவர் திருவடிகளிலே

ஆச்ரயிக்கவேணும் என்று வந்து சேர்ந்தனர். அவர்களையும் உடையவர், அருளாளப்பெருமாள்எம்பெருமானார் திருவடிகளிலே ஆச்ரயிக்கச்செய்தார். அவரும் உடையவர் நியமனப்படியே அவர்களுக்குத் திருவிலச்சினையும் ப்ரஸாதித்து அவர்களிடம், "உடையவர் குருவியின் கழுத்திலே பனங்காயைக் கட்டினாப்போல் உங்கள் இவ்விடம் சேர்ப்பித்தருளினார். ஆனால் நீங்கள் எம்பெருமானார் திருவடிகளே தஞ்சம் என்றிருங்கள்" என்று நல்வார்த்தை அருளிச்செய்தார்.

**29அ)பருத்திக்கொல்லை அம்மாள் என்றழைக்கப்படும் வரதசார்யார் வைபவம்**

பருத்திக்கொல்லையம்மாள் (இவருக்கு வரதாசார்யர் என்று திருநாமம்) கைப்பொருள் ஒன்றுமில்லாதவர். ஆகையால் அன்றைய திருவாராதனத்தகைக்கு அமுதுபடி ஸம்பாதிக்கப் புறம்பே சென்றிருந்தார். அம்மாள் தேவிகள் உடுக்கப்புடவையில்லாத ஒரு கந்தலான துணியை அணிந்து கொண்டு வெளியிலே புறப்பட வெட்கமடைந்து உள்ளே மறைந்திருந்தார். திருமலை யாத்ரையின்போது வரதராசருடைய திருமாளிகையைச் சென்றடைந்த உடையவர் அதனைக் குறிப்பாலுணர்ந்து ஒரு வஸ்த்ரத்தை உள்ளே எறிந்தருள, அவளும் அதைப் புடவையாகத் தரித்துக் கொண்டு வெளியே வந்து எம்பெருமானார் திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்தாள்.

29ஆ) எம்பெருமானார் அவளைத் தளிகை செய்து வைக்கும்படி நியமிக்க, அம்மாள் தேவிகளும், அமமாள் வருகிற வரையில் தேவரீர்கள் பொறுத்தருள வேணும், தளிகைக்கு பதார்த்தங்கள் வரவேண்டியுள்ளது" என்று விண்ணப்பம் செய்தாள்.

29இ) உடையவரும் அதைக்கேட்டுத் தளிகைக்கு வேண்டிய பதார்த்தங்கள் அமுதுபடி, பருப்பமுது, நெய்யமுது, கறியமுது மற்றும் வேண்டிய சாமான்களையும் சேகரித்துக் கொடுத்துத்தளிகை பண்ணும்படி நியமித்தருளினார். அவளும் அப்படியே நீராடி உலர்ந்த வஸ்த்ரத்தை யணிந்து கொண்டு திருமண்காப்பையும் சாற்றிக்கொண்டு திருவாய்மொழி அநுஸந்தானத்துடன் திருப்போனகம் சமைத்து, சமைத்த திருப்போனகத்தை தம்முடைய திருவாராதனமான எம்பெருமானுக்கு அமுது செய்தருளப் பண்ணி, தம்முடைய அகத்துக்காரரான பருத்திக் கொல்லை அம்மாள எழுந்தருள வேணும் என்று காத்துக்கொண்டிருந்தாள்.

அம்மாளும் உடையவர் எழுந்தருளின செய்தியைக்கேட்டு நீராடித் திருமணகாப்புச் சாற்றியருளி மிகவும் ப்ரீதியுடனே உடையவர் திருவடிகளில் தண்டன் ஸமர்ப்பித்து ஸ்ரீபாத தீர்த்தமும் சேர்த்து ஸ்வீகரித்துப் பணிவுடன் நிற்க,

29ஈ) எம்பெருமானார் அம்மமாளுடைய ஜ்ஞான, பக்தி, வைராக்யங்களைக் கண்டு மிகவும் ஈடுபட்டு அவரையும் கூட்டிக்கொண்டு எல்லோருமாக அமுது செய்தருளித் திருக்கைகள் விளக்கியெழுந்தருளியிருந்து மறுநாள் புறப்பட்ட போது எண்ணாயிரத்து எச்சான் என்பார் எதிரே வந்து எம்பெருமானாரைத் தண்டனிட்டு, தம்முடைய திருமாளிகைக்கு எழுந்தருளவேணும் என்று ப்ரார்த்தித்தார்.

29 உ) எம்பெருமானார் அவரைப் பார்த்து," உமக்கு இன்னம் ஒருவெள்ளாவிக்கிளைது, " என்றருளிச்செய்தார். (இன்னும் ஒரு முறை வெளுக்கவேண்டிய வஸ்திரம் போன்றிருக்கிறீர்) எச்சானும். "அடியேனுடைய ரஜோகுணம் போகும்படி தேவரீர் ஒரு கைங்கர்யத்தை அடியேனுக்கு நியமித்தருளவேணும்," என்று இரக்கத்துடன் வேண்டினார். உடையவரும் எச்சானைப் பார்த்து, "நீர் இன்று தொடங்கி ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் திருப்பரியட்டம் திருத்தி ஸமர்ப்பித்து வரக்கடவீர்" என்று நியமித்தருளினார். அவரும் அப்படியே அந்தக கைங்கர் யத்தைச் செய்து கொண்டு வாழ்ந்தார்.

30அ) "திருநாந்கூரில் ஓர் ஞானப்பெண்"

திருநாந்கூர் தெருத்தலையில் ஒரு ஞானப்பள்ளப்பெண் நின்று கொண்டிருந்தாள். ஆவளைக்கண்ட முதலிகள், "தூர விலகிப்போ" என்று உரக்க சப்தமிட்டனர். அவள் உடனே, "நாயன்றே, ஒரு பால் அள்ளலம்பூந்கழனி, ஒரு பால் வயலாலி மணவாளன் ஒரு பால் தேவரீர்கள் ஒரு பால் தோணநெடுவீதியும் நீள் நிலா முற்றமும் தோற்றியிருக்க அடியேன் எந்கே விலகி நிற்பேன்? " என்று அடக்கத்துடன் வினவினாள்.

30 ஆ) எம்பெருமானார் அவளுடைய வார்த்தைகளைச் செவியுற்று முதலிகளைப் பார்த்து, "காணீர் இவள் ஆழ்வார் திவ்ய ஸூக்திகளின்படியே பேசுகிறாள்" என்று மிகவும் திருவுள்ளமுகந்து அவளைக் குளிர நோக்கி அருள்செய்தார்.

31அ) நூறுதடா அக்கார அடிசல்

இராமானுசர் திவ்யதேசந்களை மந்களாசாஸனம் செய்து போகையில் "தேனே பாலே கன்னலே அமுதே திருமாலிருஞ்சோலைக்கோனே" (திருவாய்மொழி 10-7-2) என்று அழகருடைய "ஸர்வரஸ" என்கிற இனிமையிலே மூழ்கி ரஸித்து ஸர்வகந்த, "வெறிகொள் சோதி மூர்த்தி"(திருவாய்மொழி 6-9-8) என்னும்படியானவனுக்கு "நாறு நறும் பொழிலில்" பெண்பிள்ளை வாய்நேர்ந்து பராவி வைத்ததை அக்குடியில் பிறந்த தாம் நடத்துவதாக நிச்சயித்து அப்படியே நாடித் தேடி நடத்தி அவன்கைக்கொண்டு அமுது செய்தருளினதுக்கு கைக்கூலியாக "பின்னும் ஆளும் செய்வன்"(நாச்சியார் திருமொழி 9-7) என்று விண்ணப்பம் செய்து, "இவை எல்லாம் நித்யமாகக் கொண்டருளவேணும்' என்று திருப்பல்லாண்டை அநு ஸந்தித்து நின்றபோது பரமஸ்வாமிகளும் தம்முடைய பரம க்ருபையாலே விசேஷ கடாக்ஷம் செய்தருளி தீர்த்த ப்ரஸாதந்களும் ஸ்ரீசடகோபனும் ப்ரஸாதித்து விடை கொடுத்தருளினார்.

**31ஆ) "திருமாலிருஞ்சோலை மலையே என் தலையே"**

உடையவரும் தாம் விருப்புற்றபடி செய்து நிறைவேற்றியவராய் அந்கிருந்து விடைபெற்றபோது அந்கே அநுகூலரானவர்களைத நன்கு திருவாராதனம் செய்யும்படி நியமித்தருளி, அந்கே ராமானுஜ மடம் உண்டாக்கினார், மேலும் இளையாழ்வான் திருத்தோப்பு முதலாக அனேகம் திருத்தோப்புகளையும் ஏற்படுத்தி அந்கே" எல்லாவிடத்திலும் எந்கும் பரந்து பல்லாண்டொலி செல்லா நிற்கும்படி" (பெரியாழ்வார் திருமொழி 4-2-2) அநேகம் ஸ்ரீவைஷ்ணவர்களைத் திருத்தியிருத்தினார்.

31 **அ) இராமானுசர் " கோயில் அண்ணரானார்**

மெல்லிய பஞ்சடியும் துவராடையும் மேகலையும்
வல்லியை வென்ற மருந்கும் முத்தாரமும் வனமுலையும்
சொல்லிய வண்மையும் வில்லிபுத்தூரம்மை தோளழகும்
முல்லையை வென்ற நகையும் எல்லாம் என்றன் முன்னிற்குமே.

என்று இப்படிப்பட்ட வடிவழகு நிறைந்த அவயவ சோபையில் தந்தையான நிலையை எய்தி சூடிக்கொடுத்தவள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளல் இராமாநுசனாய் நிற்க.

32ஆ) சுடர்க்கொடியான கோதையும் "நம்கோயில் அண்ணர்" என்று ஒருகுடிப்பிறப்பாக எண்ணி "என்னைமார் தாம் வந்திட்டு" (என்னைமார்-

என்தமையன்மார்) (நாச்சியார் திருமொழி6-9) என்று கனாக் கண்ட குறையெல்லாம் தீரநேரேக் கண்டு திருவுள்ளம் மிகவும் உகந்தருளி அதன் வெளிப்பாடாகக் கோயிலண்ணரான உடையவருக்கு திருப்பரியட்டம் திருவாபரணங்கள் முதலான வரிசை எல்லாம் ஸமர்ப்பித்து மகிழ்ந்தாள்.

**33) இராமானுசரின் முதல் திருமலை யாத்திரை**

இராமானுசர் திருமலைக்கு மூன்று முறை எழுந்தருளினார். முதல் தடைவ, திருமலைநம்பியெனும் அவர் தம் அம்மானிடம் வான்மீகி இராமாயணத்தைப் பாடங்கேட்பதற்காகப் போந்தார். அப்போது, அவர் மலையடி வாரத்திலே தங்கியிருந்தார். ஆழ்வார்கள், திருமலையை மிதித்து ஏறுவதால் அம்மலையின் தூய்மை கெடும் என்று அஞ்சி அடிவாரத்திலிருந்தே பெருமானை மங்களாஸாசனம் செய்தருளி நலம் பெற்றனர் என்பதைக் கேள்வியுற்ற இராமானுசரும், திருமலைமேல் கால்வைத்தேற அஞ்சி அடிவாரத்திலே இருக்கத் திருமலைநம்பி நாடோறும் மலையினின்றும் இறங்கிவந்து ஓராண்டு இராமாயணத்தின் ஆழ்பொருளை அவருக்குக் கற்பித்தருளினார்.

34) இராமானுசரின் இரண்டாம் திருமலை யாத்திரை

இரண்டாம் முறை சைவர்களும் வைணவர்களும் திருவேங்கடமுடையானைத் தம் தெய்வமென வாதித்தபோது வேங்கடத்து அப்பனுக்குத் திருமொழி திருச்சங்குகளைச் சாத்தியருளுதற்காகவும், பல்வேறு நிர்வாஹ சீர்திருத்தங்களைச் செய்வதற்காகவும் திருமலைக்கு எழுந்தருளினார். அப்போது, திருமலை ஏறும்முன் மூன்று நாட்கள் எதையும் உட்கொள்ளாமல் உபவாசமிருந்து தம் உடலை தூய்மையாக்கிக்கொண்டு திருமலை ஏறித் தம் செயல்களை முடித்து மூன்று நாட்களுக்குள் மலை யினின்றும் இறங்கியருளினார்.

35) இராமானுசரின் மூன்றாம் திருமலை யாத்திரை

மூன்றாம் முறை, திருவேங்கடச் செல்வம் அழியாமல் இருத்தற்பொருட்டும், அதனைக் காத்து வளர்த்துத் திருப்பணிகள் செய்தற்குரியாரை ஏற்படுத்தற் பொருட்டும் திருமலைமேல் ஏறி அக்கோயிலின் திருப்பணித் தலைமையைத் தாமே மேற்கொண்டும், தமக்கொரு மடத்தைச் ஸந்நிதிக்கு எதிரிலுள்ள அனுமான் கோயிலுக்கு அருகில் கட்டியும், ஓராண்டு தங்கியிருந்து சீயர், ஏகாங்கிகள் நால்வர் ஆகியோரைத் தம்மிடத்தில் நிறுவி யும் திருவேங்கடமுடையான் திருப்பணிகள் குறைவின்றி நடக்குமாறு தக்க ஏற்பாடுகளைச் செய்தும் திருவரங்கத்திற்குத் திரும்பியருளினார்.

36)கட்டியம் யாதவராயன் என்பான் யார்?

திருமலையிலும் திருப்பதியிலும் இராமானுசர் செய்தருளிய சீர்திருத்தங்களுக்கும் புதிய வகையில் கோயில் திருப்பணிகளைச் செய்வதற்கும் பெருந்துணையாய் இருந்த அரசன் கட்டியம் யாதவராயன் என்பான். இவன், சோழமன்னனுக்கு அடங்கிய சிற்றரசன், நாராயணவனத்தைத் தரைநகராகக் கொண்டு அப்பகுதியை ஆண்டவன் இராமானுசரது பெருமைகளையறிந்து அவருக்குச் சீடனாயினன். இவன் காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கம் என்பது கல்வெட்டுக்களால் அறியக்கிடக்கின்றது. இராமானுசர் திருவேங்கடமுடையானுக்குத் திருவாழி திருச்சங்குகளைச் சாத்தியருளியபோது திருவேங்கடநாட்டையாண்டவன் யாதவராயன் எனப்படுகிறான். அவன், கட்டியம் யாதவராயனுக்கு முன் இருந்தவனாதல் வேண்டும். சிலர் அவனே கட்டியம் யாதவராயன் என்பர்.

37) அப்பனுக்கு ஆழியும் சங்கும் அளித்தான் வாழியே

*திருமலையில் இராமாநுசர் செய்தருளிய திருத்தங்களும் புதியதாக ஏற்படுத்தி செயல்களும் பல. அவற்றுள், திருவேங்கடமுடையானைச் சங்காழி தரிக்கச் செய்ததும், அவர் கோயில் கோபுரத்தில் உள்ள விமானத்தின் வைகானாஸ ஆகமத்திற் கூறியபடியே வராக, நரசிம்ம, வேங்கடேச தேவதைகளை அமைத்து, அக்கோயில் திருமாலுக்கே உரியதென உலகிற்கறிவிக்கச் ஸம்ப்ரோக்ஷணம் செய்வித்ததும், பெருமாள் திருமார்பில் திருமகளை இரு கைகளையுடைய திருவுருவோடு ஒரு நன்னாளில் அமைத்ததும், திருமஞ்சனகாலத்தில் திருமகள் மார்பினின்றும் இழிந்திருக்கும்போது நாச்சியார் திருமொழியை ஓதும்படி செய்ததும், திருமஞ்சனத்துக்குப்பின்,*

*பெருமான் திருநெற்றியில் இரு கோடுகளான திருமண்காப்பைக் கர்ப்பூரப் பொடிகளால் அமைத்து மூன்று நாட்கள் காட்சியளிக்கவும், மற்றைய நான்கு நாட்களிலும் முத்துப் பொடிகளால் அமைத்துக் காட்சியளிக்கவும், திருக்கண்மலருக்குக் குளிர்ச்சிக்காக அஞ்சனக்காப்பு இடவும் ஏற்பாடு செய்ததும், திருமலையிலேயே புரட்டாசி விழாவைச் செய்யத் தகுதிவாய்ந்த முறையில் திருவீதியமைத்ததும், ஞானப்பிரானுக்கு விழா முதலியன இல்லாமற் செய்ததும், மலைக்கு இனிய நின்ற பெருமானை உத்ஸவ மூர்த்தியாக்கி அவர்க்குமுன் உற்சவமூர்த்தியாய் இருந்த வேங்கடத் துறைவாரை கௌதுக மூர்த்தியாக்கியதும், தண்ணீரமுது வழிதிருத்தல், பூந்தோட்டத்தில் பெருமான் பூப்பறித்த விழா ஆகியவற்றை ஏற்படுத்தியதும், வேங்கடாத்ரியைத் திருவேங்கடமுடையான் கோயிலிலேயே பிரதிஷ்டை செய்து வைத்ததும் திருவேங்கடமுடையானது இடக்கரத்திலும் வலக்கரத்திலும் (வைகுண்ட ஹஸ்தம்) உள்ளதுபோலவே (அரவப்பணி) நாகாபரணத்தை அணிவித்ததும், திருமலையில் இருப்போர் மேற்கொள்ளவேண்டிய விதிகளை ஏற்படுத்தியதும் சிறந்தவை.*

*38 அ) தில்லை கோவிந்தனுக்கும் திருமலை கோவிந்தனுக்கும் வேறுபாடில்லை*

*திருப்பதியில், கோவிந்தராசப் பெருமாளைப்பார்த்த சாரதி சுவாமி கோயிலில் திருப்பிரதிஷ்டை செய்ததும், அவர் வலப்பக்கத்தில், செங்கழுநீர்ப் பூவைத் தரித்த கையுடன் ஆண்டாளைப் பிரதிஷ்டை செய்ததும், இருவர்க்கும் விழா முதலியவை செய்வதற்குரிய ஏற்பாடுகளையும் மண்டபம், கோபுரம் முதலிய கட்டுவித்தலையும் கட்டியம் யாதவராயன் துணைகொண்டு செய்வித்ததும், திருவேங்கடமுடையானும் கோவிந்தராசனும் வேறுபாடின்றி ஒருவரெனவேகருதுமாறு பல கட்டளைகளை அமைத்ததும் சிறந்தவை.*

*38ஆ) தில்லை கோவிந்தராஜன் திருப்பதியில் ப்ரதிஷ்டை கண்டருளிய இராமானுசன்*

*திருப்பதியில் கோவிந்தராசருக்கு ஒவ்வொரு வைகாசி மாதமும், இராமாநுசர் ஏற்பாட்டின்படி திருக்கொடித்திருநாள் நடக்கின்றது. அவ்வுருவத்தைத் திருப்பதியில் ஏற்கனவே நிலைபெற்றிருந்த பார்த்தசாரதி சுவாமியின் கோயிலில் அவருக்கு வலப்புறத்தில், தன் சீடனாகிய யாதவராயனைக் கொண்டு மண்டபமும் கர்ப்பக்கிருஹமும் கட்டச்செய்து அங்கே திருப்பிரதிஷ்டை செய்தருளினார். பார்த்தசாரதியின் திருவுருவம் சிதைவுபட்டதனால் அதற்குப் பூசை நெய்வேத்தியம் முதலியன இல்லாமற் போகவே, கோவிந்தராசனுக்கு எல்லாவிதமான உபசாரங்களும் விழாக்களும் நடைபெறுவனவாயின. இவற்றிற்கு இராமாநுசரே காரணமாவார்.*

### *39) திருமலை பிரஹ்மோத்ஸவத்தை திருச்சுகனூரிலிருந்து திருமலையில் நடைபெறுமாறு ஏற்பாடு செய்தார் இராமானுசர்*

*திருவேங்கடமுடையானுக்குக் கொடித் திருநாள் திருச்சுகனூரிலேயே நடத்தப்பட்டு வந்தது. இம்முறையை மாற்றித் திருமலையிலேயே அந்த உத்ஸவத்தை*

நடத்துவதற்காக இராமானுசர் ஏற்பாடுகளைச்செய்தார். இராமானுசரும், திருமலைக்கோவிலைப் பெரிதாக்கிக் கோபுரம் கட்டுவித்தார்.

**40) திருமலையில் உடையவர், அர்ச்சா திருமாளிகையை அனந்தாழ்வான் பிரதிஷ்டை கண்டருளுதல்.**

திருமலைக் கோயிலில் நிறுவனப் பெற்றுள்ள இராமானுசரது திருவுருவம், அனந்தாழ்வானுடைய நாற்பதாம் ஆண்டில் செய்யப்பட்டது என்றும், இராமனுசர் அதனை நோக்கி யருளித் தழுவிக்கொண்டு, அவர் பால் தந்தனர் என்றும், பின்னர் அநந்தாழ்வான், அதனைக் கோயிலில் யாதவராயன் துணைகொண்டு அமைத்தார் என்றும் திருமலை ஒழுகு கூறுகின்றது.

**41அ) திருநாராயண புரத்தில் சிவன் கோயில் புனர்நிர்மாணம் செய்து விழாக்கள் கொண்டாடும்படியான ஏற்பாடுகளைச் செய்த இராமானுசர்**

“திருநாராயணபுரத்தில் சிவன் கோயில் சிவமதத்திலுள்ள ஸந்யாஸி ஒருவரிடம் நித்திய பூஜை முதற்கொண்டு ரதோத்ஸவம் வரைக்கும் செய்விக்கிறது’ என்று நியமித்தருளினார். கல்யாணிக்கு மேற்காக நைருதி திக்கிலேயிருக்கிற திருமண்கண்டெடுத்த ஸ்தானத்திற்குத் தெற்காக ‘முக்கண்ணப்பன்’ என்கிற சிவன் கோயில் உள்ளது.

**41ஆ) திருநாராயணன் திருக்கோயிலுக்கு கர்ப்பக்ருஹம், ஶுகநாஶி அர்த்தமண்டபம்,** மஹாமண்டபம், ஆஸ்தானமண்டபம், உள் பிர தக்ஷிணம் கூட மேற்குவாசல் 1, வடக்குவாசல் 1, வடக்கு வாசலுக்கெதிராக யாகசாலை, அங்கே துரவு (பெருங்கிணறு), இருக்கும். மேற்கு வாசலிலே எதிராக தீபஸ்தம்பம் இருக்கும். தீபஸ்தம்பத்திற்கு மேற்காக ஒருவாசல். இவ்வள வோடே விமானத்தோடே கூட இந்தக் கோயில் இருக்கும். மலைக்கு மேற்காக கிராமம் ஐஞ்சிலே எடுத்தபொன் மாஸோத்ஸவ பக்ஷோத்ஸவம் மஹோத்ஸம் முதலானது களைப் பண்ணுவிக்கவும். இந்தக் கிராமத்துக் கணக்கு. விஷ்ணுவர்த்தனராயனைத்தொட்டு வாங்கின லக்ஷம் வராஹனிலே திருநாராயண ஸ்வாமி ஸந்நிதி ஜுர்ணோத்தாரணம் பண்ணி வைத்தார் இராமானுசர்.

41இ) திருநாராயணன் திருக்கோயில் ஜுர்ணோத்தாரணம் செய்தபிறகு மிகுதியான தனம் கொண்டு சிவன்கோயில் ஜுர்ணோத்தாரணம் மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கிராமக்கணக்கும் ஜுர்ணோத்தாரணக்கணக்கும் ஸ்தலத்துக்கணக்குப்பிள்ளை வசத்திலேயிருக்கும்படி செய்தார். அந்தக் கணக்குப்பிரகாரம் நித்ய பூஜை முதலானதுகளை செய்வித்துக்கொண்டு வரும்படி இந்த தேசாந்தரி திருநாராயணஜுயருக்கு ஐம்பத்திருவர் முன்னாக நியமித்தருளினார்.

41ஈ) சிவன் கோயிலுக்கு வாயவ்ய திக்கு (வடமேற்கு முதலாக அன்னதானவுடையர் மடத்துக்குத் தெற்காக இந்த சிவன்கோயிலுக்கு நைருதி திக் (தென்மேற்கு) பர்யந்தமாக சதுரஸ்ரமாக கோயில் சுற்றிலும் இந்த சிவன் கோயில் பரிஜனங்களுக்கு அகங்களைக் கட்டிக்கொண்டிருக்கும்படி நியமித்தருளினார். மஹோத்ஸவ காலங்களிலே இந்த நான்கு வீதிகளையும் பிரதக்ஷிணம் வரும்படியான ஏற்பாடுகளைச் செய்தார்.‘ ’இந்த நடைமுறையை மீறிடாமல் நடக்கவும்’ என்று நியமித்தருளினார். கோயில் கேள்வி தேஶாத்ரி திருநாராயண ஜுயரைப் பார்த்து ‘இந்த ஶிவனுடைய கைங்கர்யத்தை நீரே விசாரிக்கவும்’ (என்று நியமித்தருளினார்)

**42)திருநாராயணபுரம் ஐம்பத்திருவர்**

*இராமானுசரால் நியமிக்கப்பட்ட ஐம்பத்தி ருவரும் வேதம்வல்ல அந்தணர்கள் ஆவர். கர்நாடகப் பகுதியில் நிலவியிருந்த கிராமம் நிர்வாஹ முறையையொட்டி எம்பெருமானாரும் திருக்கோயில் கைங்கர்யங்களை மேற்கொள்வதற்காக ஐம்பத்திருவர் கொண்ட அந்தணர் குழுவை ஏற்படுத்தி வைத்தார்.*